# மாலை முரசு

பக்கங்கள் 13+5

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | ஆடி 17 வெள்ளிக்கிழமை 02.08.2024 | அதிர்வு 01


## யாழில் 20 கிலோ கஞ்சாவுடன் இளைஞர் ஒருவர் சிக்கினார்!

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், செம்மணிப் பகுதியில் கஞ்சா போதைப்பொருளுடன் இளைஞன் ஒருவர் இன்று காலை கைது செய்யப்பட்டுள்ளார்.

04


‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்




# மாகாண சபைத் தேர்தல் சட்டமூலம்: செப்டெம்பர் 6 ஆம் திகதி விவாதம்!

## கட்சித் தலைவர்கள் இன்று தீர்மானம்

மாகாண சபைத் தேர்தலைப் பழைய தேர்தல் சட்டத்துக்கு அமை ;வாக நடத்துவதற்கு வழி செய்யும் விதத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் சமர்ப்பித்துள்ள தனிநபர் சட்டமூலத்தை இரண்டாவது வாசிப்பு விவாதத்துக்காக எதிர்வரும் செப்டெம்பர் 6ஆம் திகதி நாடாளுமன்றத்தில் எடுத்துக்கொள்வது என இன்று காலை சபாநாயகர் தலைமையில் கூடிய கட்சித்தலைவர்களின் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டிருக்கின்றது.

# கடலில் மூழ்கியே இந்திய மீனவர் சாவு!

## உடற்கூற்றுப் பரிசோதனையில் உறுதி



(எஸ்.நிதர்ஷன்)

கடலில் மூழ்கியே இந்திய மீனவர் உயிரிழந்துள்ளார் என்று உடற்கூற்றுப் பரிசோதனையில் உறுதிப்படுத்தப் பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு நெடுந்தீவு கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்களின் படகை இலங்கைக் கடற்படையினர் கைது செய்ய முற்பட்டபோது இந்தியப் படகுடன் இலங்கைக் கடற்படைப் படகு மோதியதில் இந்திய மீனவரின் படகு கடலில் மூழ்கியது.

02














முரசின் முதலாம் ஆண்டு நிறைவு விழா, யாழ். நல்லூரில் அமைந்துள்ள அலுவலகத்தில் இன்று நடைபெற்றபோது...





# திருக்கோவில் பிரதேச செயலகத்தில் உண்மை, நல்லிணக்கச் செயலமர்வு

(வி.ரி. சகாதேவராஜா)

உண்மை மற்றும் நல்லிணக்க பொறிமுறையின் இடைக்காலச் செயலகத்தின் செயலமர்வு திருக்கோவில் பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரன் தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் ரஞ்சித் ஆரியரத்ன, டாக்டர் யூ.வி.தங்கராசா, சிரேஷ்ட ஆலோசகர் இசற்.ஏ.எவ்.வஸ்னியா , ஜனாதிபதி செயலக இணைப்பாளர் கொத்தலாவல ஆகியோர் பிரதானிகளாகக் கலந்து கொண்டனர்.

மேலும் திருக்கோவில் பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் திருமதி எஸ்.நிருபா, உதவித் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி.அனோஜா உஷாந்த், கிராம நிர்வாக உத்தியோகத்தர் ஏ. கந்தசாமி, பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்



இதன்போது பங்கேற்பாளர்கள் தங்கள் எண்ணங்கள் அனுபவங்கள் மற்றும் உண்மை மற்றும் நல்லிணக்க செயல்முறை தொடர்பாக பரிந்துரைகளை பகிர்ந்து கொண்டனர்.





### இணைய வழி மோசடியில் ஈடுபட்ட

# 6 சீனப் பிரஜைகள் உள்ளிட்ட 8 பேர் வசமாகச் சிக்கினார்கள்

(ந.லோகதயாளன்)

காலி, உடுகம பிரதேசத்தில் தங்கும் விடுதி ஒன்றில் நேற்று மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது இணைய வழி மோசடியில் ஈடுபட்ட 6 சீனப் பிரஜைகள் உள்ளிட்ட 8 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இணைய வழியில் மோசடிக் குற்றங்களில் ஈடுபட்டனர் எனச் சந்தேகிக்கப்படும் வெளிநாட்டுப் பிரஜைகள் குழுவினரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் பேரில் இந்தச் சோதனையை மேற்கொண்டதாகவும், சைபர் குற்றங்களில் ஈடுபட்டதாகச் சந்தேகிக்கப்படும் சீனப் பிரஜைகள் 6 பேர், கஜகஸ்தான் மற்றும் கிர்கிஸ்தானைச் சேர்ந்த இரண்டு நபர்கள் என மொத்தம் 8 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.



பொலிஸாரின் இந்தச் சோதனையின்போது, கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்த 9 மடிக்கணினிகள், 73 கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் அதிகளவான சிம்கார்டுகளைப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இது தொடர்பில் காலிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# வாகன விபத்தில் 8 பேர் காயம்

தலவாக்கலை பகுதியில் இருந்து நுவரெலியா பகுதியை நோக்கிப் பயணித்த லொறியுடன் நுவரெலியாவில் இருந்து ஹட்டன் நோக்கிப் பயணித்த சொகுசு பஸ் வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் நேருக்கு நேர் மோதியுள்ளது.




இந்த விபத்தில் 8 பேர் காயமடைந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**யாழில் 20 கிலோ...**

யாழ். வளைவுக்கு அருகில் இளைஞர் ஒருவர் சந்தேகத்துக்கிடமான முறையில் காணப்படுகின்றார் என்று பொலிஸ் விசேட அதிரடிப் படையினருக்குக் கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் இளைஞரைக் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட இளைஞரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணையில் அவர் வவுனியா பகுதியைச் சேர்ந்தவர் என்று தெரியவந்தது. அத்துடன் அவரிடமிருந்து 20 கிலோ 175 கிராம் கஞ்சா போதைப்பொருளையும் பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் மீட்டனர்.

மீட்கப்பட்ட கஞ்சா போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்ட இளைஞரை மேலதிக சட்ட நடவடிக்கைக்காக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் ஒப்படைத்தனர்.

---

**மாகாண சபை...**

ஜனாதிபதித் தேர்தல் நடப்பதற்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர் இந்தச் சட்டத்தை மீண்டும் நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கு வழி செய்யும் விதத்தில் மேற்படி சட்டமூலம் நாடாளுமன்றத்துக்கு வருகின்றது.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கான சட்டமூலத்தை நிறைவேற்றுவது என்று சுமந்திரன் எம்.பியுடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஏற்கனவே பேச்சு நடத்தி முடிவு செய்தமைக்கு அமைய, இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது.

இந்தச் சட்டமூலத்தின் மீதான விவாதத்தை இம்மாதம் 22, 23ஆம் திகதிகளில் நடத்தச் சுமந்திரன் எம்.பி. கோரியிருந்த போதிலும், வேறு முற்கூட்டியே திட்டமிடப்பட்ட விடயங்கள் நாடாளுமன்றத்துக்கு இருப்பதினால், அது அடுத்த மாதம் 6 ஆம் திகதிக்குத் திகதியிடப்பட்டுள்ளது.

திட்டமிட்டபடி இந்தச் சட்டமூலம் நிறைவேற்றப்படுமானால், அது நிறைவேறிய நாளிலிருந்து மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கான அதிகாரம் சுதந்திர தேர்தல்கள் ஆணையத்துக்கு வந்து விடும். ஆகையால் ஜனாதிபதித் தேர்தல் முடிந்த கையோடு, மாகாண சபைத் தேர்தலுக்கான அழைப்பைத் தேர்தல் ஆணையம் விடுக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

நீண்டகாலமாக நடைபெறாமல் தடைப்பட்டிருக்கும் மாகாண சபைத் தேர்தல் ஜனாதிபதித் தேர்தல் முடிந்து இரண்டு மாதங்களுக்குள் நடைபெறக்கூடிய வாய்ப்பு இந்தச் சட்டமூலம் நிறைவேறும்போது கிட்டும் என எதிர்பார்க்கலாம்.

---

**கடலில் மூழ்கியே...**

இந்நிலையில், குறித்த மீன்பிடிப் படகில் இருந்த இராமேஸ்வரம் மீனவர்கள் ஐவர் கடலில் மூழ்கினர்.

இதனையடுத்து மூன்று மீனவர்கள் உடனடியாக இலங்கைக் கடற்படையினரால் மீட்கப்பட்டதோடு ஒருவர் ஆபத்தான நிலையில் புங்குடுதீவு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

மாயமான மீனவரை இந்திய, இலங்கைக் கடற்படையினர் தேடி வருகின்றனர் என்று இலங்கைக் கடற்படையின் ஊடகப் பேச்சாளர் கப்டன் கயான் விக்கிரமசூரிய தெரிவித்தார்.

உயிரிழந்த மீனவரின் சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருந்த நிலையில் சட்ட வைத்திய அதிகாரி செ.பிரணவனால் இன்று உடற்கூற்றுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

மேற்படி மீனவர் நீரில் மூழ்கியதால் உயிரிழப்பு ஏற்பட்டது என்று அறிக்கையிடப்பட்டுள்ளது.

இதேவேளை, கைதாகி விடுவிக்கப்பட்ட மீனவர்கள் இருவரையும் யாழ். போதான வைத்தியசாலையில் வைத்து யாழ். இந்தியத் துணைத் தூதுவர் சாய் முரளி உள்ளிட்ட அதிகாரிகள் பார்வையிட்டதுடன் கலந்துரையாடலிலும் ஈடுபட்டனர்.

விடுவிக்கப்பட்ட இரண்டு மீனவர்களும் யாழ். இந்தியத் துணைத் தூதரக அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர். உயிரிழந்த மீனவரின் சடலமும் அவர்களிடம் கையளிக்கப்பட்டது.




# அறுகம்பேயில் அரை மரதன் ஓட்டம்; ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன!

(றியாஸ் ஆதம்)

அறுகம்பே அபிவிருத்தி போரம் ஏற்பாடு செய்துள்ள அறுகம்பே சர்வதேச அரை மரதன் ஓட்டப் போட்டி எதிர்வரும் 18 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை இடம்பெறவுள்ளது. அதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன என்று போரத்தின் தலைவரும், இயன்மருத்துவருமான இஸட்.எம்.ஹாஜித் தெரிவித்தார்.

அறுகம்பே சர்வதேச அரை மரதன் ஓட்டப் போட்டி தொடர்பாக விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் மாநாடு நேற்று வியாழக்கிழமை (01) அறுகம்பே பட்டிவே உல்லாச விடுதியில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உலகில் இடம்பெற்றுவரும் பிரசித்தி பெற்ற மரதன் ஓட்டப் போட்டிகளில் அறுகம்பே அரை மரதன் போட்டியும் இடம்பிடிக்க வேண்டும் எனும் நோக்கில், 6 ஆவது தடவையாக இந்த மரதன் ஓட்டப் போட்டியை நடத்தவுள்ளோம். அறுகம்பே அரை மரதன் ஓட்டப் போட்டியானது உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் முக்கியத்துவம் பெற்றுள்ளது.

தற்போது உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகை அறுகம்பை பிரதேசத்தை நோக்கி அதிகரித்துக் காணப்படுகிறது. இந்தக் காலகட்டத்தில் உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலா பயணிகளை கவரும் வகையிலும், சுற்றுலாத்துறையை ஊக்குவிக்கும் பொருட்டும் இம்மரதன் ஓட்டப் போட்டியைச் சர்வதேச தரத்தில் நடத்துவதற்கு உரிய ஒழுங்குகளைச்செய்துள்ளோம்.

இந்தப் போட்டியில் உள்நாட்டு, வெளிநாட்டு வீரர்கள் என 250 பேர் பங்கேற்கவுள்ளனர். இதில் 200 உள்நாட்டு வீரர்களும் 50 வெளிநாட்டு வீரர்களும் கலந்து கொள்ளவுள்ளனர். பிரதேச மரதன் ஓட்ட வீரர்களுக்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. குறித்த போட்டி நிகழ்ச்சியில் கலந்துகொண்டு வெற்றிபெறும் வீரர்களுக்கு பெறுமதியான பரிசில்களும், சான்றுதழ்களும் வழங்கவுள்ளோம்.

இந்த மரதன் போட்டியானது 21.1 கிலோ மீற்றர், 10 கிலோ மீற்றர், 5 கிலோ மீற்றர் என 3 பிரிவுகளாக நடைபெறவுள்ளது. 21.1 கிலோ மீற்றர் பிரிவில் 17 வயதுக்கு மேற்பட்டவர்களும், 10 கிலோ மீற்றர் பிரிவில் 17 வயதினரும் 5கிலோ மீற்றர் பிரிவில் 12 - 17 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களும் பங்குபற்ற முடியும்.- என்றார்.

இந்த நிகழ்வில் போரத்தின் பிரதி தலைவர் எம்.எஸ்.அப்துல் நாசர், பொதுச் செயலாளர் எம்.எச்.சுபுஹான் உள்ளிட்ட போரத்தின் உயர்பீட உறுப்பினர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

# நூல் வெளியீடும் இலக்கிய அரங்கும் ஞாயிற்றுக்கிழமை பிரிஸ்பேர்னில்!

ஆஸ்திரேலிய தமிழ் காங்கிரஸ், குயின்ஸ்லாந்து கிளையின் அனுசரணையில் ஐங்கரன் விக்கினேஸ்வராவின் மூன்று நூல்கள் வெளியீடும் இலக்கிய அரங்கும் பிரிஸ்பேர்ன் மாநகரில் நாளை மறுதினம் (04) நடைபெறவுள்ளது.

'பாலஸ்தீனம் எரியும் தேசம்', 'ஓர்மத்தின் உறைவிடம் இஸ்ரேல்', 'இலங்கை இதழியலில் சிவகுருநாதன்' ஆகிய ஐங்கரன் விக்கினேஸ்வராவின் மூன்று நூல்கள் வெளியீடு பிரிஸ்பேர்னில் உள்ள மவுண்ட் ஓமானி நூலக மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வில் வாழ்த்துரையை ஈழத்தின் மூத்த பெண் எழுத்தாளர் 'தாமரைச் செல்வி' திருமதி ரதிதேவி கந்தசாமி வழங்குவார். அத்துடன் தமிழ் வாழ்த்துப் பாடலை பிரிஸ்பேர்ன் தமிழ்ப் பாடசாலை மாணவர்கள் பாடவுள்ளனர்.

இந்த நிகழ்வின் தலைமையுரையை ஆஸ்திரேலிய தமிழ் காங்கிரஸ், குயின்ஸ்லாந்து கிளையின் மூத்த செயற்பாட்டாளர் செந்தில் குமரன் ஆற்றுவார்.

'பாலஸ்தீனம் எரியும்' தேசம் நூல் அறிமுகவுரையை சிவா கைலாசம் நிகழ்த்துவார். அதன்பின் 'ஓர்மத்தின் உறைவிடம் இஸ்ரேல்' நூலின் அறிமுகவுரையை டாக்டர். துஷ்யந்தன் திசைநாயகம் ஆற்றுவார். 'இலங்கை இதழியலில் சிவகுருநாதன்' நூலின் அறிமுகவுரையை ரஜினிகாந்த் ஜெயராமன் ஆற்றுவார்.

ஆஸ்திரேலிய தமிழ் காங்கிரஸ், குயின்ஸ்லாந்து கிளையின் அனுசரணையில் நடைபெறும் நூல் வெளியீடும் இலக்கிய அரங்கின் ஏற்புரையை ஐங்கரன் விக்கினேஸ்வரா நிகழ்த்துவார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## கடன் எனும் மாறாப் பிணி

கடந்த ஏப்ரலில் வெளியிடப்பட்ட இலங்கை தொடர்பான உலக வங்கியின் அறிக்கை, கடந்த நான்கு வருடங்களில், நாட்டில் மிக மோசமாக வறுமை அதிகரித்துள்ளதை வெளிப்படுத்தி நின்றது.

வறுமை நிலைமை 2019 இல் 11 சதவீதத்திலிருந்து 2024 இல் கிட்டத்தட்ட 26 சதவீதமாக அதிகரித்துள்ளது. அதாவது இலங்கையின் சனத்தொகையில், கால் பகுதிக்கும் அதிகமானோர் வறுமையில் வாழ்கின்றனர் என்பதே இதன் பொருளாகும்.

அதாவது இந்த நாட்டிலுள்ள 22 மில்லியன் மக்களில் 5.5 மில்லியன் மக்கள் ஏழைகளாக உள்ளனர்.

வறுமை என்பது, உணவு, உடை, உறைவிடம், பாதுகாப்பான குடிதண்ணீர், கல்வி பெறும் வாய்ப்பு, பிற குடிமக்களிடம் மதிப்புப் பெறுதல் போன்றவை உட்பட்ட, வாழ்க்கைத் தரத்தைத் தீர்மானிப்பவற்றை இழந்த நிலைமை ஆகும்.

இலங்கை உட்பட பல நாடுகளில் - முக்கியமாக வளர்ந்து வரும் நாடுகளில் - வறுமை ஒழிப்பு என்பது ஒரு முக்கியமான இலக்காக இருந்துவருகிறது.

மிக மோசமான பொருளாதார நெருக்கடிக்குள் சிக்குப்பட்ட இலங்கை மெல்ல, மெல்ல அதிலிருந்து மீண்டெழுந்து வருவதாகக் கூறப்பட்டாலும் வறுமை நிலையில் வாடுவோர் அதிலிருந்து மீளுவதற்கான வாய்ப்புகள் திருப்திகரமானவையாக அமையவில்லை என்பதே உண்மை நிலமையாகும்.

இலங்கையில் நான்கில் ஒரு பகுதியினர் வறுமையில் வாழ்கின்றனர், இவர்களில் ஐம்பது வீதத்துக்கும் அதிகமானோர் - அரைவாசிக்கும் மேற்பட்டோர் - சமூகப் பாதுகாப்புத் திட்டங்களுக்குள் உள்வாங்கப்படாதோர் ஆவர் என்றும் புள்ளி விவரங்கள் கூறுகின்றன.

அஸ்வெசும போன்ற உதவித்திட்டங்களுக்குள் கணிசமானோரை தற்போதைய அரசு உள்வாங்கியுள்ள போதிலும் வறுமை ஒழிப்பில் மேம்பட்ட நிலைமை இன்னும் ஏற்படவேயில்லை என்பதுதான் களமுனைத் தகவல்களாக இருக்கின்றன.

இதற்கிடையில் -

பொருளாதார நெருக்கடி காரணமாக இலங்கையில் 22 வீதமான குடும்பங்கள் கடனாளிகளாக மாறியுள்ளன என சனத்தொகை மற்றும் புள்ளிவிவரத் திணைக்களத்தினால் ஜூலை 29ஆம் திகதி வெளியிடப்பட்ட கணக்காய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

அந்த அறிக்கையின்படி, அதிகக் கடன் தொகை வீதம் அடமானங்கள் மூலம் பதிவாகியுள்ளமையுடன், 31 வீதமான கடன்கள் அடமானங்கள் மூலமாக பெறப்பட்டுள்ளன.

இந்நாட்டில் 22.3 வீதமான குடும்பங்கள் தமது அன்றாட உணவுத் தேவையை பூர்த்தி செய்து கொள்வதற்காகவே கடன்களைப் பெற்றுள்ளனஎனவும்குறிப்பிடப்பட்டுள்ளது.

அரச மற்றும் தனியார் வங்கிகளிடமிருந்து 21.9 வீதமும், சமுர்த்தி போன்ற கிராம வங்கிகளிலிருந்து 7.1 வீதமும், பணமாகக் கடன் வழங்குபவர்களிடமிருந்து 9.7 வீதமும், நிதி மற்றும் குத்தகை நிறுவனங்களிலிருந்து 8.7 வீதமும் இவ்வாறு கடன் பெறப்பட்டுள்ளன என வகைப்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, பொருளாதார நடவடிக்கைகளுக்காக 15.7 வீதமும், வீடு கட்டுதல் மற்றும் வீடு பழுதுபார்ப்பதற்காக 17 வீதமும், சுகாதாரத் தேவைகளுக்காக 9.9 வீதமும், முந்தைய கடன்களைத் தீர்ப்பதற்காக 11.9 வீதமும் கடன் பெறப்பட்டுள்ளது.

2020 மற்றும் 2021ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின் காரணமாக, அத்தியாவசியச் செலவுகளை ஈடுகட்ட வீட்டுப் பிரிவுகள் அதிகமாகக் கடன் வாங்குவதை இந்த தணிக்கை அறிக்கை எடுத்துக்காட்டுகிறது.

கடனைத் திருப்பிச் செலுத்த இயலாமை, கடனைச் சார்ந்திருப்பது போன்ற காரணங்களால் கடனைத் திருப்பிச் செலுத்துவதில் சவால்கள் எழுந்துள்ளன எனவும் இந்தத் தணிக்கை அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

பொருளாதார நெருக்கடி மற்றும் பொருள்களின் விலையேற்றம், வறுமை நிலை காரணமாக இலங்கையில் சுமார் 60 வீதமான குடும்பங்கள் உணவு வேளைகளைக் குறைத்துள்ளன என்று கூறப்படுகின்றது. இதனால் பசி, பட்டினி, போஷாக்கின்மை, நோய் எதிர்ப்புத் தன்மை குறைவு, ஆரோக்கியமற்ற நலிந்த நிலைமை என்று சமூகம் பெரும் இக்கட்டை எதிர்கொண்டிருப்பதாகவும் சுட்டப்படுகின்றது.




# பாதுகாப்பான புலம் பெயர்தல் விழிப்புணர்வு நிகழ்வு மட்டுவில்!

(பழுவூரான்)

மட்டக்களப்பில் பாதுகாப்பான புலம் பெயர்தல் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஜஸ்டினா முரளிதரன் தலைமையில் பழைய மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று (01) இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் நியூசிலாந்து தூதரக உயர் அதிகாரி பிரஷ்சி கலந்து கொண்டார்.

மட்டக்களப்பு மாவட்ட செயலகம் மற்றும் இடம் பெயர்வு கொள்கை மேம்பாட்டுக்கான சர்வதேச மையத்தினரால் சமுதாய மட்டத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் நியூசிலாந்து நாட்டின் நிதி உதவியின் கீழ் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

ஐக்கிய நாடுகள் சபையால் பிரகடனப்படுத்தப்பட்ட சர்வதேச மனித கடத்தல் தினம் ஜூலை 30 ஆம் திகதி ஆகும். அதனை நினைவு கூரும் முகமாக இளைஞர்களை விழிப்புணர்வூட்டும் வகையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

மனித கடத்தல், மனித வியாபாரம், சட்டவிரோத புலம்பெயர்தல், கடல் வழியாக ஆட்கடத்தல் போன்ற பாதுகாப்பற்ற சட்டவிரோத பயணங்களால் ஏற்படும் ஆபத்துக்கள் பற்றி இதன்போது விரிவாக விளக்கங்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் மாவட்ட மேலதிக அரச அதிபர் (காணி)திருமதி நவருபரஞ்சினி முகுந்தன், 243 படைப் பிரிவின் கட்டளைத் தளபதி பிரிகேடியர் சந்திம குமாரசிங்க, பிரதேச செயலாளர்கள், உதவி மாவட்ட செயலாளர் ஜி.பிரணவன், உதவிப் பிரதேச செயலாளர்கள், பொலிஸ் அத்தியட்சகர் அஜித் பண்டார, இடம் பெயர்வு கொள்கை மேம்பாட்டுக்கான சர்வதேச மையத்தின் இணைப்பாளர் எம்.ஏ.எம். மலிக், முப்படை உயர் அதிகாரிகள், அரச உத்தியோகத்தர்கள், பல் கலைக்கழக மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.












# சமஷ்டி முறையிலான தீர்வு நாட்டுக்கு முன்னேற்றம் தரும்

**வடக்குக் கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவின் இணைப்பாளர் யாட்சன் பிகிராடோ**

( வாஸ் கூஞ்ஞ)

சமஷ்டி முறையிலான அரசியல் தீர்வு காரணமாக உலகிலே நாகரிகமான நாடுகள் முன்னேறிக் கொண்டு வருகின்றன. இதன் காரணமாகவே இலங்கையிலும் தமிழ் மக்களுக்கும் சமஸ்டி முறையிலான தீர்வு எட்டப்பட வேண்டும் என்று வலியுறுத்துகின்றோம் என வடக்குக் கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவின் வட மாகாண இணைப்பாளர் யாட்சன் பிகிராடோ தெரிவித்தார்.

வடகிழக்கு ஒருங்கிணைப்பு குழுவின் வட மாகாண இணைப்பாளர் யாட்சன் பிகிராடோ நேற்று வியாழக்கிழமை (01) ஊடகச் சந்திப்பின்போது இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒருங்கிணைந்த வடக்கு கிழக்கு மாகாணத்தினுள் சமஸ்டி முறையிலான தீர்வை வலியுறுத்தும் செயற்பாடுகளைக் கடந்த வருடம் ஆவணி மாதம் முதலாம் திகதி நாங்கள் தொடர்ந்திருந்தோம்.

இதற்கு முன்பும் எமது தமிழ் தலைவர்கள் தொடர்ச்சியாக சமஸ்டி முறையிலான தீர்வுக்காக ஆட்சிக்கு வந்த ஆட்சியாளர்களிடம் வலியுறுத்தி இருந்தார்கள்.

இதன் தொடர்ச்சியாகவே எமது வடக்குக் கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவும் சமஸ்டி முறையிலான அரசியல் தீர்வை வடக்குக் கிழக்கு மக்களின் ஏகோபித்த ஒரு தீர்வாக நாங்கள் முன்வைத்துள்ளோம்.

இந்த சமஸ்டி முறையிலான அரசியல் தீர்வு காரணமாக உலகில் நாகரிகமான நாடுகள் முன்னேறிக் கொண்டு வருகின்றன. இதனால் சர்வதேச நாடுகள் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இந்த சமஸ்டி முறையிலான தீர்வு காணப்படுகின்றது. இதனாலேயே இது தொடர்பான நாடுகள் முன்னேற்றம் கண்டு வருகின்றது.

இதன் அடிப்படையிலேயே வட கிழக்கு பெரும்பாலான தமிழ் மக்கள் இந்த வடகிழக்கு ஒருங்கிணைப்பு குழுவின் ஊடாக இத்திட்டத்தை தொடர்ந்து முன்வைக்கின்றோம்.

தமிழ் மக்களின் நீண்டகாலமாக புரையோடி இருக்கின்ற பிரச்சனைக்கு ஒரு தீர்வாக அமையும் என்பதை முன்னிட்டே இதை நாங்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றோம்.- என்றார்.

# விசேட தொழிற்பயிற்சி பெற்ற மாணவர்களுக்குச் சான்றிதழ்!

(சம்மாந்துறை தில்சாத் பர்வீஸ்)

உயர்தரப் பரீட்சை (2023) எழுதிய மாணவர்களுக்கான 3 ஆம் நிலைக் கல்வியின் ஊடாகத் தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சித் திட்டத்தின் அடிப்படையில் கல்வி அமைச்சு, தேசிய கல்வி நிறுவகம், 3 ஆம் நிலை மற்றும் தொழில் வழிகாட்டல் ஆணைக்குழு ஆகியவற்றின் அனுசரணையுடன் நடத்தப்பட்ட விசேட தொழிற் பயிற்சிப் பாடநெறியைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்று (01) வியாழக்கிழமை சம்மாந்துறை முஸ்லிம் மத்திய மஹா வித்தியாலய தேசிய பாடசாலை கேட்போர் கூடத்தில் பாடசாலை அதிபர் எம்.டீ.எம்.ஜனூபர் தலைமையில் இடம்பெற்றது.



இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம்.ஹனீபா கலந்து கொண்டார்.

கௌரவ அதிதிகளாக மாவட்ட ஒருங்கினணப்பாளரும் அம்பாறை மாவட்ட திறன் அபிவிருத்தி உத்தியோகத்தருமான வி.நடனகுமார் மற்றும் சம்மாந்துறை பிரதேச செயலகத் திறன் அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.எச்.எம்.எஸ்.ஐ.எ. மௌலானா மற்றும் சம்மாந்துறை முஸ்லிம் மத்திய மஹா வித்தியாலய தேசிய பாடசாலை பிரதி அதிபர்களான எ.ஜவாஹிர், எம்.வை.லாபிர் யூசுப், எம்.சி.பர்சான் மற்றும் இந்த நிகழ்ச்சித் திட்டத்துக்குப் பொறுப்பான ஆசிரியர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் விரிவுரையைச் சம்மாந்துறை பிரதேச செயலகத் திறன் அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.எச்.எம்.எஸ்.ஐ.எ. மௌலானா வழங்கினார்.

இந்த நிகழ்ச்சித் திட்டமானது கடந்த மூன்று மாதங்களாக பாடசாலையில் இடம்பெற்று நிறைவுக்கு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# பேசாலை பங்கின் கீழ் இயங்கும் முன்பள்ளிகளின் விளையாட்டு விழா

(வாஸ் கூஞ்ஞ)

மன்னார் பேசாலை புனித வெற்ற நாயகி ஆலய பங்கின் கீழ் இயங்கி வரும் அமலதாசன் , சென்.மேரிஸ் மற்றும் விக்றரிஸ் ஆகிய மூன்று முன்பள்ளிகள் இணைந்து இந்த நடப்பு வருட சிறார்களின் வருடாந்த விளை யாட்டு நிகழ்வுகளை நடத்தினர்.

பேசாலை பங்குத் தந்தை அருட்பணி சத்தியராஜ் அடிகளாரின் தலைமையில் நேற்று வியாழக்கிழமை (01) புனித வெற்றி அன்னையின் ஆலய முன்றலில் நடத்தப்பட்ட இந்த விளையாட்டு நிகழ்வுகளில் மூன்று முன்பள்ளிகளில் இருந்தும் 161 சிறார்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கை கடலில் உயிரிழப்பு தொடர்பில் இந்திய அரசும் மீனவர்களும் அசமந்தம்

## வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் செயலாளர் ஆலம் தெரிவிப்பு

(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி நுழைதல் இதனால் ஏற்படும் கைதுகள் மற்றும் உயிரிழப்புச் சம்பவங்கள் தொடர்பிலும், குறித்த சம்பவங்கள் இடம் பெறக்கூடாது என்றும் இந்திய மீனவர்களைப் பேச்சுக்கு அழைத்த போதும் இதுவரை அவர்கள் ஒத்துழைப்பு வழுங்கவில்லை என வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் செயலாளர் என்.எம்.ஆலம் தெரிவித்தார்.

மன்னாரில் நேற்று வியாழன் (01) மாலை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்திய மீனவர்களின் இழுவைப் படகுகள் சீ.எப்.சிறிலங்கா என அழைக்கப்படும் இலங்கை கடற்பரப்பில் நுழைந்து, நெடுந்தீவு கடற்பரப்பில் சென்ற நிலையில் இலங்கை கடற்படையினரால் கைது செய்ய முயன்ற போது துயர சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்திய மீனவர்களின் அத்து மீறிய வருகை தொடர்பாக நாங்கள் தொடர்ச்சியாக வலியுறுத்தி வரும் விடையங்களில் இந்திய மீனவர்களின் எல்லை தாண்டிய வருகை உடன் நிறுத்தப்பட வேண்டும்.

இதனால் ஏற்படக் கூடிய பாரிய இழப்புக்கள், கைது நடவடிக்கைகள், மீனவர்களாகிய உங்களுக்கு ஏற்படக் கூடிய துன்பியல் சம்பவங்கள் தொடர்பாக நாங்கள் ஏற்கனவே உங்களுக்கு வலியுறுத்தி வருகிற விடயங்களையே மீண்டும் கூற விரும்புகிறேன்.

கடலிலே பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடும் பாதுகாப்புத் தரப்பினர் அடிக்கடி கடலில் கைது செய்யும் நடவடிக்கைகள் தொடர்கின்றன.

அண்மையில் இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்த இந்திய மீனவர் ஒருவரைக் கைது செய்ய முயன்ற போது கடற்படை வீரர் ஒருவர் உயிரிழந்தார்.

அதே போன்றுதான் நேற்று முன்தினம் நள்ளிரவு நெடுந்தீவு கடற்பரப்பில் வைத்து இந்திய மீனவர்களை கைது செய்யும் நடவடிக்கைகளை மேற்கொண்ட போது மீனவர் ஒருவர் உயிரிழந்துள்ளார். எமது எல்லையினுல் அத்துமீறி வந்ததன் காரணமாக இந்தப் பிரச்சினை ஏற்பட்டுள்ளது.

இலங்கை கடற்பரப்பினுல் அத்துமீறி நுழைந்து மீன் வளங்களை சூறையாடுவதற்கும், கடல் வளங்கள் காவு




கொள்ளபடுவதையும் தடுப்பதே கடற்படையினரின் கடமை. அங்கே கடமை ஒன்று இடம்பெற்றுள்ளது.

கடமையின் நிமித்தம் ஒருவரின் கைதின் போது காய மடைந்த ஒருவர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழப்பு ஏற்படுவது தவிர்க்கப்பட வேண்டிய விடயம். எனினும் எல்லை தாண்டி வருகின்ற விடயத்தை நாங்கள் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்ற போதும் இந்திய அரசும் சரி, இந்த நாட்டு மீனவர்களும் சரி காது கொடுத்துக் கேட்பதும் இல்லை.

தொடர்ந்து இவ்வாறான ஒரு சம்பவங்கள் இடம் பெறக் கூடாது என்பதற்காகவே நாங்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம். இனியாவது அவர்கள் ஒன்றை புரிந்து கொள்ள வேண்டும்.

எல்லை தாண்டி வருகின்ற போது இடம்பெறும் கைதுகள், இவ்வாறான துன்பியல் நிகழ்வுகளை எதிர்காலத்தில் இரு நாட்டு மீனவர்களும் சந்தித்து விடக் கூடாது என்பது தொடர்பில் நாங்கள் கவனம் செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இந்தச் சம்பவமானது தமிழக மீனவர்களின் செயற் பாட்டாலேயே நிகழ்ந்துள்ளது. இதற்காக அங்கே பாரிய அளவில் போராட்டங்கள் இடம்பெறுகின்றன. இந்தப் போராட்டம் அவர்களின் உரிமை சார்ந்தது. அதில் நாங்கள் தலையிட விரும்பவில்லை. இருந்தாலும் எமக்கு மன வேதனையை ஏற்படுத்துகிறது. அங்குள்ள பெண்கள் மற்றும் தாய்மாரின் அழு குரல்களை ஊடகங்கள் மூலம் காண்கின்றோம். வேதனை ஏற்படுகிறது.

இவ்வாறான சம்பவங்களை தடுக்க தொடர்ந்து நாங்கள் இந்திய மீனவர்களை கலந்துரையாடலுக்கு அழைக்கின்றோம். பேச்சுவார்த்தையை ஏற்படுத்தி அதனூடாக ஒரு தீர்வை எட்டுவோம்.- என்றார்.

# பாலஸ்தீனத்தின் விடுதலைப் பாதையை கோழைத் தாக்குதலால் முடக்க முடியாது!

## இஸ்மாயில் ஹனியா படுகொலை மனித உரிமை மீறலாகும் என்று ரிஷாட் பதியுதீன் கண்டனம்

**(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)**



தமது மண்ணுக்கான உரிமை மீட்பு போராட்டத்தில் நிலைத்து நின்ற பாலஸ்தீனத்தின் ஹமாஸ் அரசியல் அமைப்பின் தலைவர் இஸ்மாயில் ஹனியா படுகொலை சம்பவமானது மிலேச்சத் தனமான வெறியர்களின் முகங்களைக் காட்டுகிறது. இப் படுகொலைகளை மனிதத்துவம் கொண்ட எவராலும் அங்கீகரிக்க முடியாது.

ஆக்கிரமிப்பை மட்டும் கொண்டு ஹமாஸ் மக்களையும், சிறுவர்களையும், கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் முதியவர்கள் என பாராது கொடூரமான முறையில் கொன்றொழிக்கும் இஸ்ரேலின் இந்த செயலை, நான் பிரதிநிதித்துவம் செய்யும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் வன்மையாகக் கண்டிக்கின்றது.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தனது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கை – பலஸ்தீன உறவு என்பது பல ஆண்டுகள் நெருக்கமானது. இந்த உறவானது எம்மில் இருந்து பிரிக்க முடியாததொன்று என்பதால் தான் நாம் இழப்புக்களின் வேதனையை உணர்கின்றோம்.

பாலஸ்தீனத்தின் போராட்டம் என்பது உலகளாவிய வல்லரசுகள் கூட நியாயம் கண்டுள்ள நிலையில், இஸ்ரேல் தொடர்ந்து கட்டுக்கடங்காது, காட்டுமிராண்டித்தனமாக மேற்கொண்டுவரும் தாக்குதல்கள் அந்த மக்களை மேலும் பல இழப்புக்களுக்குள் தள்ளிவருகின்றது.

அப்பட்டமான மனித உரிமை மீறல்களாக இந்தப் படுகொலை காணப்படுகிறது. எல்லை மீறும் இஸ்ரேலின் இந்த மோசமான மனிதப் படுகொலையை நிறுத்த உலக நாடுகள் தொடர்ந்து அழுத்தம் கொடுக்க வேண்டுகிறது. இஸ்ரேலின் இத் தாக்குதலில் கொல்லப்பட்ட ஹமாஸ் அமைப்பின் தலைவர் மர்ஹூம் இஸ்மாயில் ஹனியாவின் மறைவுக்கு எமது கட்சி ஆழ்ந்த கவலையினை வெளிப்படுத்துகின்றது.

அதே போல் ஷஹீதுடைய அந்தஸ்தை எல்லாம் வல்ல அல்லாஹ்த்தஆலா அவருக்கு வழங்க பிரார்த்தனை செய்கின்றேன்.– என்றுள்ளது.





## இலங்கைக் கடற்படைக்குக் கடும் கண்டனம்

## கைதான மீனவர்கள் நாடு திரும்பவேண்டும்

## பலியானவரின் சடலம் உடன் கொண்டுவரவேண்டும்

## தமிழக மீனவர்கள் காலவரையறையற்ற

# போராட்டம்!

"தமிழக மீனவர்களுக்கு எதிரான இலங்கைக் கடற்படையினரின் செயற்பாடுகளைக் கண்டித்தும் இலங்கை ரோந்துக் கப்பல் மோதி உயிரிழந்த இராமேஸ்வரம் மீனவரின் உடலை தமிழ்நாடு கொண்டு வரும் வரையும் போராட்டம் தொடரும்" என தமிழக மீனவர்கள் அறிவித்துள்ளனர்.

நேற்று இராமேஸ்வரத்தைச் சேர்ந்த 4 மீனவர்கள் சென்ற படகில், இலங்கைக் கடற்படையினரின் ரோந்துப் படகு மோதியதில் மலைச்சாமி என்ற மீனவர் உயிரிழந்தார். மற்றொருவர் கடலில் மாயமானார். மேலும் 2 பேரை இலங்கைக் கடற்படை பிடித்துச்சென்றுள்ளது. இந்தச் சம்பவத்துக்கு மத்திய அரசு கண்டனம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், இலங்கை ரோந்துக் கப்பல் மோதி உயிரிழந்த இராமேஸ்வரம் மீனவரின் உடலை தமிழ்நாட்டுக்குக் கொண்டு வரும் வரை போராட்டம் தொடரும் என மீனவர்கள் அறிவித்துள்ளனர்.

மீனவர்களைக் கைது செய்து தாக்குதல் நடத்தும் இலங்கைக் கடற்படையைக் கண்டித்தும் விசைப்படகு மூழ்கிய சம்பவத்தில், உயிருடன் மீட்கப்பட்ட 2 மீனவர்கள் வழக்குப்பதிவு இன்றி தமிழ்நாடு திரும்பும் வரை காலவரையற்ற வேலை நிறுத்தப் போராட்டம் நடத்தப்படும் எனவும் மீனவர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.







# தொடரும் சோகம்

## கேரள நிலச்சரிவு: பலி எண்ணிக்கை 300ஐ கடந்தது

வயநாடு நிலச்சரிவில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 318 ஆக அதிகரித்துள்ளது.

கேரள மாநிலம் வயநாடு மாவட்டத்தில் உள்ள மலைப்பகுதியில் கடந்த 29ஆம் திகதி இரவு கனமழை பெய்தது. கனமழை காரணமாக 30ஆம் திகதி நள்ளிரவு 2 மணி முதல் அதிகாலை 6 வரை அடுத்தடுத்து நிலச்சரிவு ஏற்பட்டது.

கனமழை, நிலச்சரிவுடன் சாளியாற்றில் காட்டாற்று வெள்ளமும் ஏற்பட்டது. இதன் காரணமாக முண்டக்கை, சூரல்மலை, மேப்பாடி ஆகிய கிராமங்கள் நிலச்சரிவில் மண்ணுக்குள் புதைந்தன. இந்த கோர நிலச்சரிவில் சிக்கி இதுவரை 316 பேர் உயிரிழந்துள்ளனர். 3,500க்கும் மேற்பட்டோர் மீட்கப்பட்டு முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். தொடர்ந்து 4ஆவது நாளாக மீட்புப்பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது.

நாளுக்கு நாள் உயிரிழப்புகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றமையால் பெரும் அச்ச நிலை தொடர்ந்தவண்ணமே உள்ளது.

## அமெரிக்க அதிபர் ஜோ பைடன்

# இரங்கல்

கேரள மாநிலம், வயநாடு நிலச்சரிவில் சிக்கி உயிரிழுந்தவர்களின் குடும்பங்களுக்கு அமெரிக்க அதிபர் ஜோ பைடன் இரங்கல் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள இரங்கல் பதிவில், “இந்தியாவின் கேரளா மாநிலத்தில் ஏற்பட்ட நிலச்சரிவில் உயிரிழந்தோருக்கு ஆழ்ந்த இரங்கல்களை தெரிவித்துக்கொள்கிறேன். நிலச்சரிவில் அன்புக்குரியோரை இழந்துவாடும் குடும்பங்களுக்கு எனது பிரார்த்தனைகள். பேரிடரின்போது மீட்புப் பணிகளில் ஈடுபடும் வீரர்களின் தைரியத்திற்கு பாராட்டுகள்” என்று தெரிவித்துள்ளார்.



## 4 நாள்களின் பின்னர் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் உயிருடன்

# மீட்பு!

வயநாடு நிலச்சரிவில் சிக்கிய ஒரே குடும்பத்தை சேர்ந்த 4 பேர் 4 நாட்களுக்குபின் உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர்.

சூரல்மலையில் இருந்து 3 கிலோமீற்றர் தொலைவில் உள்ள கிராமம் படவெட்டிகன்னு. இந்தக் கிராமமும் நிலச்சரிவால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இந்தப் கிராமத்தைச் சேர்ந்த ஜானி தனது குடும்பத்துடன் நிலச்சரிவில் சிக்கிக்கொண்டார். நிலச்சரிவு ஏற்பட்டபோது அவர் குடும்பத்துடன் மலை உச்சிக்குச் சென்று தப்பியிருக்கலாம் என தகவல் வெளியான நிலையில், ஜானி தனது குடும்பத்துடன் வீட்டிலேயே இருந்துள்ளார். தற்போது 4 நாட்கள் கழித்து ஜானி மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்கள் 4 பேரும் உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர்.

ஜானி குடும்பத்தில் 2 ஆண்கள், பெண், சிறுமி என 4 பேர் மீட்கப்பட்டுள்ளனர். இதில் சிறுமிக்கு காலில் காயம் ஏற்பட்டுள்ளது. மீட்கப்பட்ட அனைவரும் முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அதேவேளை, காயமடைந்த சிறுமிக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. மீட்கப்பட்ட 4 பேரும் கடந்த 4 நாட்களாக தங்கள் வீட்டிலேயே இருந்துள்ளனர். நிலச்சரிவில் ஜெனரேட்டர் பாதிக்கப்படாதமையால் 4 நாட்களும் ஜானி வீட்டில் மின் இணைப்பு இருந்துள்ளது.



# பள்ளிமீது இஸ்ரேல் தாக்குதல் 15 பேர் பலி; 29 பேர் வரை காயம்

காசாவில் உள்ள ஷெஜையா என்ற இடத்தில் செயல்பட்டு வந்த பள்ளி மீது இஸ்ரேல் படையினர் நேற்றுத் தாக்குதல் நடத்தியுள்ளனர். இதில் அந்தப் பள்ளியில் தஞ்சம் புகுந்திருந்த பாலஸ்தீனியர்கள் 15 பேர் பலியானார்கள். 29 பேர் காயமடைந்தனர்.

காசா முனையின் பல்வேறு பகுதிகளிலும் போர் தொடர்ந்து வருகிறது. இந்தச் சூழலில் நடத்தப்பட்ட இந்தத் தாக்குதல் குறித்து இஸ்ரேல் இராணுவம் கூறும்போது,

“அந்தப் பள்ளியின் வளாகத்திற்குள் செயல்பட்டு வந்த ஹமாஸ் அமைப்பினரை இலக்காகக் கொண்டு தாக்குதல் நடத்தப்பட்டது.

ஹமாஸ் தளபதிகள் மற்றும் அந்த அமைப்பினரின் பதுங்கு குழியாக அந்த பள்ளி பயன்படுத்தப்பட்டு வந்தது” என இஸ்ரேல் கூறியுள்ளது.

இந்தத் தாக்குதலுக்கு முன்பு, பொதுமக்களுக்கு தீங்கு ஏற்படும் ஆபத்துகளை குறைப்பதற்கான பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. கண்காணிப்பு மற்றும் கூடுதல் உளவு விடயங்கள் மேற்கொள்ளப்பட்டன என இஸ்ரேல் இராணுவம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் பயன்படுத்தும் உட்கட்டமைப்புப் பகுதியில் ஹமாஸ் அமைப்பு உள்நோக்கத்துடன் செயல்படுகிறது எனவும் இஸ்ரேல் கூறியுள்ளது.

எனினும், “வைத்தியசாலைகள் மற்றும் பள்ளிகள் போன்ற இடங்களை இராணுவ நோக்கங்களுக்காகப் பயன்படுத்தவில்லை” என ஹமாஸ் அமைப்புக் கூறியுள்ளது.




# மணிலாவில் தீ; 11 பேர் சாவு!

பிலிப்பைன்ஸின் தலைநகர் மணிலாவிலுள்ள கட்டடம் ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் 11 பேர் உயிரிழந்துள்ளனர்.

பிலிப்பைன்ஸின் தலைநகர் மணிலாவில் சீனா டவுன் மாவட்டத்தில் உள்ள வணிக வளாகக் கட்டடத்தில் இன்று காலை பயங்கர தீ விபத்து ஏற்பட்டது.

இந்தக் கட்டடத்தின் கீழ் தளத்தில் உள்ள உணவகத்தில் பற்றிய தீ, மளமளவென கட்டடத்தின் மேல் பகுதிக்கும் பரவியது. இந்தத் தீ விபத்துக் குறித்துத் தகவலறிந்த தீயணைப்புப் படையினர் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து பற்றி எரிந்த தீயை அணைத்தனர்.

ஆனாலும், இந்தத் தீ விபத்தில் 11 பேர் உயிரிழந்தனர். இந்தத் தீ விபத்துக்கான காரணம் குறித்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# கனடா முரசு

பக்கங்கள் - 5


வெள்ளிக்கிழமை 02/08/2024


## வீதி விபத்தில் ஒருவர் சாவு!

ஒன்ராறியோ,ஓகஸ்ட்02

றொறன்ரோவில் மோட்டார் சைக்கிள் ஒன்று கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளான சம்பவத் தில் நபர் ஒருவர் உயிரிழந்

02▶



# கனடியர் உட்பட 16 கைதிகளை நேற்று விடுதலை செய்தது ரஷ்யா

ஒன்ராறியோ, ஓகஸ்ட் 02

சோவியத்திற்குப் பிந்தைய வரலாற்றில் அமெரிக்காவும் ரஷ்யாவும் அதிகளவு கைதி களை பரிமாற்றம் செய்தமையை அடுத்து, கனடாவில் பிறந்த போல் வீலன் மற்றும் கனே டியர் ஒருவர் நேற்று விடுவிக்கப்பட்டுள்ளனர்.

'இதைச் சாத்தியமாக்கிய ஒப்பந்தம் இரா ஜதந்திரத்தின் ஒரு சாதனையாகும்' என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோ பிடன் ஒரு செய்தி மாநாட்டில், விடுவிக்கப்பட்ட சில கைதிகளுடன் தொலைபேசியில் பேசிய பிறகு தெரி வித்துள்ளார்.

02▶

# சாட்சிகளைக் குழப்பிய சம்பவத்துக்காக மன்னிப்புக் கோருகின்றார் லிபரல் எம்.பி.

ஒன்ராறியோ, ஓகஸ்ட்02

லிபரல் நாடாளுமன்ற உறுப்பினரான அனிதா வாண்டன்பெல்ட், பெண்களுக்கு எதிரான வன்முறை குறித்து சாட்சியமளித்த இரு சாட்சிகளை நாடாளுமன்றக் குழு விசாரணையில் இருந்து வெளியேற வழிவகுத்த குழப்பத்தைத் தூண்டியமைக்காக மன்னிப்புக் கோரியுள்ளார்.

வாண்டன்பெல்ட் ஓர் அறிக்கையில், 'இந்தச் சந்திப்பு சாட்சிகளுக்கு ஏற்படுத்திய மன உளைச்சலுக்கு' ஆழ்ந்த வருந்துகின்றார் எனக் கூறியுள்ளார்.


குடும்ப வன்முறையில் இருந்து தப்பிய கெய்ட் அலெக்சாண்டர், 'துஷ்பிரயோகமான' நடத்தை என்று விவரித்ததற்காக நாடாளுமன்ற உறுப்பினரிடம் மன்னிப்பு கேட்க வேண்டும் என்று கோரியதை அடுத்து இந்த அறிக்கை வந்தது.

'இது மன்னிப்பு அல்ல – இது ஓர் அறிக்கை,' என்று பாதிக்கப்பட்டவர் கூறியுள்ளார்.

அவர் துஷ்பிரயோகத்தை எதிர்கொண்ட பெண்கள்



மற்றும் சிறுமிகளின் முழு சமூகத்தையும் வருந்தச் செய்திருக்கின்றார் எனப் பாதிக்கப்பட்டவர் தெரிவித்துள்ளார்.



# ஜெஸ்பர் நகரில் காட்டுத்தீயினால் எரியுண்ட தம் வீடுகளைப் பார்வையிட விரும்பும் மக்கள்

அல்பேர்ட்டா, ஓகஸ்ட்02

ஜெஸ்பர் நகரில் காட்டுத்தீயால் எரியுண்ட பகுதியில் வசிப்பவர்கள் தங்கள் வீடுகளின் நிலையைப் பார்க்கத் திரும்புவதற்கான திட்டம் உள்ளது என ஜெஸ்பர் நகர மேயர் ரிச்சர்ட் அயர்லேன்ட் தெரிவித்துள்ளார்.

எனினும், அதனை உடனடியாக முன்னெடுப்பதற்கு தீ மற்றும் வானிலை ஒத்துழைக்கவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பாதிக்கப்பட்டு, வீடுகளை விட்டு வெளியேறியவர்கள் திரும்பி வந்து தங்கள் வீடுகளைப் பார்க்க விரும்புகிறார்கள் என்றுநேற்றையதினம்ஊடகவியலாளர்களை சந்தித்த மேயர் குறிப்பிட்டுள்ளார்.

மக்கள் பாதுகாப்பாக இருக்கும் போது மட்டுமே திரும்ப முடியும் என்றும், இன்னும் தீ உள்ளது என்றும் மேயர் தெரிவித்துள்ளார்.

10 நாள்களுக்கு முன்பு ஜெஸ்பர் தேசிய பூங்காவிலிருந்து 25,000 பேரை வெளியேற்ற காரணமாக அமைந்தது இந்தக் காட்டுத் தீ! நகரத்தில் உள்ள அனைத்து கட்ட மைப்புகளில் மூன்றில் ஒரு பங்கு அழிக்கப்பட்டது, ஆனால் பாடசாலைகள் மற்றும் நீர் சுத்திகரிப்பு நிலையம் உள்ளிட்ட முக்கிய உள்கட்டமைப்புகள் காப்பாற்றப்பட்டன எனத் தெரிவிக்கப்படுகின்றது.



## வீதி...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

திருக்கின்றார் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

இந்த விபத்து சம்பவம் நேற்று அதிகாலை 2.45 மணிக்கு ரட்ரொம் வீதியின் அதிவேக நெடுஞ்சாலையில் இடம் பெற்றுள்ளது.

விபத்தில் படுகாயம் அடைந்த நபர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார் எனவும், சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்து விட்டார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த விபத்தில் வேறு வாகனங்கள் எதுவும் தொடர்பு படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.விபத்துக் காரணமாக அந்த வீதி, சில மணித்தியாலங்களுக்கு மூடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கனடியர்...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வீலன், வோல் ஸ்ட்ரீட் ஜர்னல் நிருபர் இவான் கெரஷ்கோவிச் மற்றும் பத்திரிகையாளர் அல்சு குர்மாஷேவா உட்பட 16 பேர் பன்னாட்டு ஒப்பந்தத்தின் மூலம் ரஷ்யக் காவலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர்.

வியாழன் முன்னெடுக்கப்பட்ட ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக ரஷ்ய எதிர்க்கட்சித் தலைவரும் ஆர்வலருமான விளாடிமிர் காரா-முர்சாவும் விடுவிக்கப்பட்டுள்ளார்.

காரா-முர்சா 2022 இல் ரஷ்யாவில் இரண்டு நஞ்சூட்டல் முயற்சியில் இருந்து தப்பிய பின்னர் தடுத்து வைக்கப்பட்டார்.

ஜூன் 2023 இல் அவருக்கு கௌரவ கனடிய குடியுரிமை வழங்கப்பட்டது.

இந்த கோடையின் தொடக்கத்தில் வெளியிடப்பட்ட அறிக்கையில் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, ஜனநாயகத்திற்கான அவரது தைரியத்தையும் அர்ப்பணிப்பையும் பாராட்டினார். அரசியல் கைதிகள் அநியாயமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்றும், அவர்களின் சுதந்திரம் நீண்ட காலம் கடந்துவிட்டதாகவும் ட்ரூடோ நேற்று தெரிவித்துள்ளார்.




# புதிய ஜனநாயகக் கட்சியின் வேட்பாளர் டான்ஸ்ஃக்கு வின்னிப்பெக் இடைத்தேர்தலில் பல தரப்பும் ஆதரவு

மனிடோபா, ஓகஸ்ட் 02

வின்னிப்பெக்கில் நடைபெறவுள்ள நாடாளுமன்ற இடைத்தேர்தலில் கன்சர் வேட்டிவ் கட்சியின் வர்த்தக முகாமை யாளர் மற்றும் பல்வேறு லிபரல் கட்சித் தலைவர்கள் புதிய ஜனநாயகக் கட்சியின் வேட்பாளருக்கு ஆதரவை வெளிப்படுத்தியுள்ளனர்.

புதிய ஜனநாயகக் கட்சியினர் தங்கள் கோட்டையைத் தக்கவைத்துக் கொள்வதற்கான முயற்சிகளுக்கு இந்த ஒப்புதல்கள் ஊக்கமளிப்பனவாக உள்ளன.

கனடா முழுவதிலும் உள்ள மில்லி யன் கணக்கான தொழிலாளர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பதின்மூன்று தொழிற்சங்கங்கள், புதிய ஜனநாயகக் கட்சியின் வேட்பாளர் லீலா டான்ஸை ஆதரிக்க ஒன்றிணைவதாகத் தெரிவித் துள்ளன.

டான்ஸ்ஃக்கு ஆதரவு தெரிவித்துள்ள தொழிற்சங்களில் ஒன்றில் கன்சர் வேட்டிவ் கட்சியைச் டேவ் மெபெய்ல் வர்த்தக முகாமையாளராக இருக்கும் தொழிற்சங்கமும் உள்ளடங்குகின்றது.

எனினும், கன்சர்வேட்டிவ் கட்சியின் வேட்பாளரான கொலின் ரெய்னோல்ட்ஸ் மிகத் தீவிரமாக டான்ஸ்ஃக்கு எதிராக பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# 19 நாய்களைச் சுட்டு கொன்ற நபர் கைது!

நியூ ஃபவுண்ட்லாண்ட், ஓகஸ்ட்02

நியூ ஃபவுண்ட்லாண்ட் பகுதியில் 19 நாய்கள் கொல்லப்பட்டிருந்த நிலையில் நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்நபர் ஒன்றாரியோவை சேர்ந்தவர் எனத் தெரிவிக்கப்படுகிறது. மிருக வதையில் ஈடுபட்டார் என அவர் மீது பொலிஸார் வழக்கு தாக்கல் செய் துள்ளனர்.

அவரின் வீட்டிலிருந்து 19 நாய்களின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

வீட்டின் பின்புறத்தில் வைத்து நாய்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப் பட்டுள்ளது.

கொல்லப்பட்ட நாய்களில் நாய்க்குட் டிகளும் உள்ளடங்குகின்றன எனவும் தெரிவிக்கப்படுகிறது.




கவனயீனமாக ஆயுதங்களை பயன் படுத்தினார் எனவும், விலங்குகளைச் சித்திரவதை செய்தார் எனவும் அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. அந் நபர் நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப் பட்டதன் பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளார்.



# பௌத்த தியான நிலையக் கூடாரம் சூறைக்காற்றில் நொறுங்கியதில் ஒருவர் சாவு; 50 பேருக்குக் காயம்!

அல்பேர்ட்டா, ஓகஸ்ட்02

எட்மன்டன் நகருக்கு வடமேல் பகுதியில் அமைந்துள்ள பௌத்த தியான நிலையத்தில் அமைக்கப்பட்டிருந்த கூடாரம் ஒன்று கடும் காற்றின் காரணமாக சேதமடைந்துள்ளது.

இந்த விபத்தினால் ஒருவர் உயிரிழுந்தமையுடன், 50 பேர் காயமடைந்துள்ளனர். காயமடைந்தவர்கள் வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

புதன்கிழமை மாலை 5:30 மணியளவில் கூடாரம் இடிந்து விழுவதற்கு சற்று முன் அப்பகுதியை காற்றும் மழையும் தாக்கியது எனவும், புயல் சுமார் ஒரு மணி நேரத்தில் முடிந்து விட்டது எனவும் அந்தத் தியான நிலையத்தின் அமைப்பாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். வியாழக்கிழமை நண்பகலில், அல்டாவின் பஸ்பிக்கு அருகிலுள்ள மடத்தின் தோட்டப் பகுதியில் ஒரு நொறுங்கிய கூடாரத்தைக் காண முடிந்தது.

இந்த கூடாரத்தில் சுமார் 100 முதல் 200 பேர் வரையில் சம்பவம் இடம்பெற்றபோது இருந்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

காயமடைந்தவர்களில், பலர் பலத்த காயம் அடைந்தனர் எனவும், சுமார் 50 பேர் வீக்கங்கள் முதல் உடைந்த எலும்புகள் வரை சிறிய காயங்களுடன் உள்ளனர் எனவும் அவர் கூறியுள்ளார்.

கடுமையான இடியுடன் கூடிய மழையுடன் அப்பகுதியில் மணிக்கு 80 முதல் 100 கிலோமீட்டர் வேகத்தில் காற்று வீசியது என்று சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் தொடர்பான கனடாவின் எச்சரிக்கை தயார்நிலை வானிலை ஆய்வாளர் அலிசா பெடர்சன் குறிப்பிட்டுள்ளார்.

உயிரிழந்தவர்களின் ஆள் அடையாள விவரங்கள் எதுவும் இதுவரையில் வெளியிடப்படவில்லை.

இந்தச் சம்பவம் தொடர்பிலான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

# தமிழின ஆதரவாளர் சக் கனடாவில் காலமானார்

காவல்துறை அதிகாரி, புகழ்பெற்ற எழுத்தாளர், சர்வதேச குற்றவியல் நிபுணர் சக் கொங்கல் காலமானார் என்பதை அவர்களது குடும்பத்தினர் அறிவித்துள்ளனர்.

சக் கொங்கல் தனது 73வது வயதில் ஜூலை 21ஆம் திகதி காலமானார்.

நெதர்லாந்தின் ரொட்டர்டாமில் பிறந்த சக், பல திறமைகள் மற்றும் சாதனைகளின் சொந்தக்காரர் ஆவார்.

கடந்த இரு தசாப்தங்களில் சக் தமிழ் சமூக நிகழ்வுகளில் கலந்து கொண்டுள்ளார். இலங்கையில் தமிழர்கள் மீதான மனிதஉரிமை மீறல்கள் மற்றும் துன்புறுத்தல்களுக்கு எதிராக அவர் குரல் கொடுத்தார். கனடாவில் பல தமிழர்களால் அவர் நண்பராக மதிப்பட்டவராகவும் இருந்தார்.

சக் சர்வதேச உறவுகளில் முதுமாணிப் பட்டம் பெற்றவர். பல மொழிகளில் திறமையானவர்.


அவரது காவல்துறை வாழ்க்கை தசாப்தங்களும் கண்டங்களும் கடந்து பரவியது, முதலில் ராயல்ஹொங்காங் காவல்துறையில் இன்ஸ்பெக்டர் ஆகத் துவங்கி, பின்னர் ரொறன்ரோ காவல்துறையில் சேர்ந்தார்.

அங்கு ஆசிய மற்றும் கிழக்கு ஐரோப்பிய ஒழுங்கற்ற



குற்றங்களில் நிபுணராக அறிவிக்கப்பட்டார். அவர் கனடிய ஆயுதப்படையில் பணியாற்றியுள்ளார்.

சக் சர்வதேச காவல்துறைகளுடன், உட்பட இண்டர்போல், போலாந்தின் தேசிய காவல்துறை, டச்சு காவல்துறை, பெல்ஜியம் காவல் துறை, மேலும் RCMP மற்றும் FBI (குவாண்டிகோவில் பயிற்சி அளித்தும்) ஆகியவற்றுடன் இணைந்து பணியாற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.







# 2 பிள்ளைகளுடன் 30 ஆண்டுகளுக்கு முன் கைவிட்டுச் சென்ற கணவர் இன்றோ மனைவியின் சொத்து மட்டும் 15 ஆயிரத்து 165 கோடி ரூபா!

கனேடிய பெண்ணொருவரை 30 ஆண்டுகளுக்கு முன் வெறுங்கையுடனும், இரண்டு பிள்ளைகளுடனும் கைவிட்டுச் சென்றார் அவருடைய கணவர்.

ஆனால், அந்தப் பெண் இன்று ஆயிரம் கோடிகளுக்கு அதிபதியாக வாழ்ந்துவருகிறார்.

பொதுவாக செல்வந்தர்கள் கலைப்பொருள்களை வாங்கித் தங்கள் வீடுகளை அழகுபடுத்துவார்கள். ஆனால், கனேடிய பெண்ணொருவர், வீடுகளையே கலைப்பொருள்கள்போல் வாங்கிக் குவித்துள்ளார்.



தற்போது இங்கிலாந்திலுள்ள கென்டில் மாளிகை ஒன்றில் பிளாஸ்டிக் சர்ஜனான தன் இரண்டாவது கணவரான ஜேம்ஸ் என்பவருடன் வாழ்ந்துவரும் அவரது பெயர், Dr Ann Kaplan Mulholland.

அவரிடம் தற்போது 11 வீடுகள் உள்ளன. இங்கிலாந்திலுள்ள கென்டில் 139 ஏக்கர் பரப்பில் ஒரு மாளிகை, ஹவாயில் மூன்று வீடுகள், கனடாவில் ஐந்து வீடுகள், லாஸ் வேகஸில் 17,000 சதுர அடியில் ஒரு வீடு, அதன் விலை 18 மில்லியன் டொலர்கள்!



இன்று தலையில் வைர கிரீடமும், கையில் 23 காரட் நிச்சயதார்த்த மோதிரமும், டிசைனர் உடையும், 4,000 பவுண்டுகள் மதிப்புடைய ஷூக்களுமாக இளவரசி போல வலம் வருகிறார் ஆன்.

ஆனால், 30 ஆண்டுகளுக்கு முன் அவரது நிலைமையே வேறு!

அவரது முதல் கணவர், கனடாவின் ரொரன்றோவில் இரண்டு குழந்தைகளுடன் ஆனைக் கைவிட்டுவிட்டு காணாமல் போனார்.



முறையே 21 மற்றும் 9 மாதங்களே வயதுடைய இரண்டு குழந்தைகளுடன் தனித்துவிடப்பட்ட ஆன், தனியாளாக மருத்துவ கடன் வழங்கும் பிசினஸ் ஒன்றைத் தொடங்கினார்.

கடுமையாக உழைத்து முன்னேறிய ஆனுடைய சொத்து மதிப்பு, இன்று 500 மில்லியன் பவுண்டுகள், இலங்கை மதிப்பில் 1,51,65,30,50,000 ரூபா!

# ஒன்றாரியோ மார்க்கம் பகுதியில் இருந்து காணாமல் போன பெண் சடலமாக மீட்பு!

ஒன்றாரியோ மார்க்கம் பகுதியில் காணாமல் போன பெண்ணொருவர் சடலமாகப் பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளார்.

கடந்த வாரம் இந்த பெண் காணாமல் போயிருந்தார். யோர்க் பிராந்திய பொலிஸார் இந்தச் சம்பவம் குறித்த விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

மார்க்கம் நகருக்கு நூறு கிலோமீட்டர் வட கிழக்கே காணப்படும் கவர்த்தா நதி பகுதியில் யிங் ஸஹாங் என்ற இந்த 58 வயதுப் பெண்ணின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இந்த பெண்ணின் மரணத்துடன் 26 வயதான நபர் ஒருவர் தொடர்பு பட்டிருக்கின்றார் எனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.



இந்தப் பெண்ணின் சடலம் தொடர்பிலான பிரேத பரிசோதனைகள் நடத்தப்பட உள்ளதாகவும் விசாரணைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.